# சென்னைக்கு தொண்டர்கள் புறப்பாடு.

---

(நமது நிருபர்)

விருதுநகர், ஜூன் 8.

தோழர் ஈழத்துச் சாமிகளின் தந்தியின்படி இன்றுஇவ்விடமிரு ந்து கெ. 12- செங்கோட்டை பிரயாணியில் 5 முஸ்லிம் தொண்டர்களும் 1-ஹிந்து தொண்டரும் ஆக 6 தொண்டர்கள் சென்னைக்கு புறப்பட்டார்கள். அவர்களை ஊர்வலமாகஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்ற வீர ஆரவாரத்துடன் அழைத்துச் சென்றார்கள். தொண்டர்கள் எல்லாம் நெஞ்சுறுதி உள்ளவர்களாயும், மலையே பெயரினும் கலங்காத வீரமுடையவர்கள். வெற்றி நிச்சயமென்பதற்கு சந்தேகமில்லை. தமிழ் வாழ்க!